©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 20] சென்னை, புதன்கிழமை, ஜூன் 1, 2011
வைகாசி 18, திருவள்ளுவர் ஆண்டு–2042

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**அறிவிக்கை**

*[அரசாணை (2ப) எண் 3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 17 பிப்ரவரி 2011.]*

1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதி மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின்கீழ், நியமிக்கப்பட்டுள்ள குழுவின் ஆலோசனையை கருதிப் பார்த்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் காளான் வளர்ப்பு மற்றும் துணைப்பணிகளில், வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களும், கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்தவர்களுமாகிய பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதியங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் நிர்ணயிக்கிறார்.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**காளான் வளர்ப்பு மற்றும் துணைப்பணிகளில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர் வகை* | *குறைந்த அளவு அடிப்படை ஊதியங்கள்* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மண்டலம்–1* | *மண்டலம்–2* | *மண்டலம்–3* |
| பதவித்தரம் எண் 1 | | | | |
| | மேற்பார்வையாளர்கள் | ரூ. 6,500 | ரூ. 6,450 | ரூ. 6,400 |
| பதவித்தரம் எண் 2 | | | | |
| 1. | கணக்காளர் | ரூ. 5,500 | ரூ. 5,450 | ரூ. 5,400 |
| 2. | மின்கம்மியர் | | | |
| 3. | பாப்கேட் ஆபரேட்டர் (Bobcat) | | | |
| 4. | வளர்ப்போர் | | | |

| *தொடர் எண்* | *பணியாளர் வகை* | *குறைந்த அளவு அடிப்படை ஊதியங்கள்* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மண்டலம்–1* | *மண்டலம்–2* | *மண்டலம்–3* |
| பதவித்தரம் எண் 3 | | | | |
| 1. | ஓட்டுநர்கள் | | | |
| 2. | ஆய்வுக்கூட தொழில்நுட்ப வல்லுநர் | ரூ. 4,800 | ரூ. 4,750 | ரூ. 4,700 |
| 3. | பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் | | | |
| பதவித்தரம் எண் 4 | | | | |
| 1. | பயிற்சி பெறாத தொழிலாளர்கள் | | | |
| 2. | காவலர் | ரூ. 3,550 | ரூ. 3,430 | ரூ. 3,380 |

| *தொடர் எண்* | *பணியின் வகைப்பாடு மற்றும் பணியாளர்களின் பதவித்தரம்* | *குறைந்த அளவு அடிப்படை ஊதியங்கள் (நாளொன்றுக்கு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | முளை அமைக்கும் தொழிலாளர்கள் (I டர்னிங், II டர்னிங், III டர்னிங்) | |
| 2. | பங்கர் இயக்கம் (பங்க்கர்–I, பங்க்கர்–II, பங்க்கர்–III) | |
| 3. | காளான் கருவிழைகளை கலக்குதல் | |
| 4. | பிளஸ்ஸிங் செய்முறை | |
| 5. | பொதித்தல் | ரூ. 130 |
| 6. | கொய்தல் | |
| 7. | சிப்பம் செய்தல் | |
| 8. | நீர் தெளித்தல் | |
| 9. | அடைத்தல் | |
| 10. | ஏனைய பொதுவான தொழிலாளர்கள் (மேற்சொன்ன எந்தவொரு பதவித்தரத்தின் கீழும் வராதவர்கள்) | |

**விளக்கங்கள்:–அகவிலைப்படி:—**

(i) அகவிலைப்படியானது 2008ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணினை அடிப்படையாகக் கொண்டு (அதாவது, 1982ஆம் ஆண்டில், 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு 670 புள்ளிகள்) வழங்கப்பட வேண்டும். மேற்கூறிய 670 புள்ளிகளுக்கு மேல் உயரும். ஒவ்வொரு புள்ளிக்கும் மாதமொன்றுக்கு அகவிலைப்படியாக ரூபாய் 5.00 (ரூபாய் ஐந்து மட்டும்) வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி வீதமானது, முந்தைய 12 மாதங்களுக்கான, அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை நுகர்வோர் சராசரி விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் அடிப்படையில், ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்படவேண்டும். மற்றும்

(iii) முந்தைய ஆண்டின், அதாவது ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான நுகர்வோர் விலைப்புள்ளி சராசரி குறியீட்டு எண்ணை அடிப்படையாக கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அகவிலைப்படியின் முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

**(2) வகைப்படுத்தப்பட்ட மண்டலங்கள் பற்றிய விவரம் வருமாறு:—**

*(i) மண்டலம்–1*

அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஆகியவை இதில் அடங்கும்.

*(ii) மண்டலம்–2*

நகரியங்கள், மூன்றாம் நிலை நகராட்சிகள், பாளையங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

*(iii) மண்டலம்–3*

மேலே குறிப்பிடப்பட்டுள்ள (1), (2) ஆகிய மண்டலங்களில் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பகுதிகள் நீங்கலாக ஏனைய அனைத்துப் பகுதிகளும் இதிலடங்கும்.

3. ஒரே தன்மையுடைய வேலைசெய்யும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண் / பெண் தொழிலாளர்களுக்கிடையே வேறுபாடு காட்டக் கூடாது.

4. நாட்கூலியை கணக்கிட, மாத ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

5. மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, நாட்கூலி வீதத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

6. மொத்த ஊதியம் என்பது அதாவது, அடிப்படை ஊதியங்கள் மற்றும் அகவிலைப்படி ஆகியவை, இந்த அறிவிக்கையின் இணக்க செயல்நோக்கத்திற்கான அளவுகோலாக இருக்க வேண்டும்.

7. இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும், தற்போதுள்ள ஊதியங்கள் கூடுதலாக இருந்தால் அந்தக் கூடுதல் ஊதியமே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.